# குடும்ப வன்முறை -

# உறவுகளுக்கிடையே வன்முறை

Runder Tisch Häusliche Gewalt Kreis Steinfurt

தகவல் • உதவி • முகவரி



next
before

## முன்னுரை

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பது மற்றும் முற்காப்பது பற்றிய இஸ்தாம்புல் சாசனமானது, 01 பெப்ரவரி 2018 இலிருந்து சேர்மனியில் அமுலுக்கு வந்தது. இதன்மூலம், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குடும்ப வன்முறை ஆகியவற்றிற்கான முற்காப்பு மற்றும் தடுப்பு அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் வன்முறையாளரைத் தண்டித்தல் ஆகியவற்றிற்கான விரிவான நடவடிக்கையை எடுப்பதற்கு சேர்மனி கடமைப்பட்டுள்ளது.

Kreis Steinfurt பகுதியில் வருடாவருடம் குடும்பவன்முறை பற்றிய பல தகவல்கள் காவலதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. Kreis Steinfurt இல் Landrat இன் உருவாக்கம் மற்றும் தலைமையின் கீழ் der Runde Tisch Häusliche Gewalt 08.யூலை 2003 அன்று தொடங்கப்பட்டது.

Runder Tisch இன் குறிக்கோள்களாவன:

- குடும்ப வன்முறையக் கண்டிப்பது
- பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் மற்றும் உதவி
- குடும்ப வன்முறைநடவடிக்கைகளை முற்காப்பு ஏற்பாட்டுகளின் மூலம் குறைப்பது

குடும்ப வன்முறையால் பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இக் கையேடு கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களாகப் பெண்களே முதலில் குறிப்பிடப்படுகிறார்கள்.

இங்கே விபரிக்கப்பட்டவை குடும்ப வன்முறையால் அச்சுறுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஏனைய அனைவருக்குமே நிச்சயமாகப் பொருந்தும்.

வெளியிடுபவர்:

„Runder Tisch - Häusliche Gewalt Kreis Steinfurt“
தொடர்பிற்கு: வட்டார சமத்துவப் பொறுப்பாளர் Brigitte Kumpmann,
ஏனைய தொடர்பாளர்களை www.kreis-steinfurt.de/häuslichegewalt என்ற வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

பதிப்பு: Dezember 2022

Kreis Steinfurt இன் Landrat இன் தலைமையின் கீழ்

வெளியீட்டு உதவி:

Ministerium für Kinder, Jugend, Familie, Gleichstellung, Flucht und Integration des Landes Nordrhein-Westfalen

KREIS STEINFURT

next before

# உள்ளடக்க அட்டவணை


பெண்களுக்கு . . . . 4

„குடும்ப வன்முறை“ என்றால் என்ன? . . . . 5

குடும்ப வன்முறையின் வடிவங்கள் என்ன? . . . . 6

திடீர் குடும்ப வன்முறை - என்ன செய்வது? . . . . 7
வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கான ஆணை . . . . 8
திரும்பவருவதைத் தடுப்பதற்கான ஆணை . . . . 8
திரும்பவருவதைத் தடுப்பதற்கான ஆணை கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை பரிசீலித்தல் 9
ஆபத்திலிருந்து காப்பதற்கு காவலர்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கை . . . . 9

எப்படித் தொடர்வது? . . . . 10

வேறு என்னென்ன நீதிமன்ற பாதுகாப்புமுறைகள் உள்ளன? . . . . 11
நீதிமன்ற பாதுகாப்பாணை . . . . 11
இணைந்து பாவிக்கும் வீட்டை ஒப்படைத்தல் . . . . 12
இணைந்து பாவிக்கும் வீட்டின் ஒப்படைப்பு எவ்வளவு காலத்திற்கு . . . . 12
நட்டஈடும் நிதிசாரா இழப்பீடும் . . . . 13
குழந்தைகளின் பாதுகாப்புப்பொறுப்பு, வசிப்பிடத்தை தீர்மானிக்கும் உரிமைஇ பார்க்கும் உரிமை . . . . 13

வீடு மாறுவது - எங்கே? . . . . 14

பெண்களுக்காக எந்த உதவிகள் உள்ளன? . . . . 15
உதவித்தொலைபேசி . . . . 15
பெண்கள் ஆலோசனை மையம் . . . . 16
வேறு ஆதரவுகள் . . . . 17

குழந்தைகளுக்கு எந்த உதவிகள் உள்ளன? . . . . 18

ஆண்களுக்கு எந்த உதவிகள் உள்ளன? . . . . 19

பாதுகாப்பிற்கே முன்னுரிமை - என்ன செய்வது? . . . . 20

வீடு மாறுவது - என்ன தேவை?. . . . . 21

எவ்விதமான நிதியுதவிகள் உள்ளன? . . . . 22
SGB II அடிப்படையிலான உதவிகள் . . . . 22
UVG அடிப்படையிலான உதவிகள் . . . . 22
OEG அடிப்படையிலான உதவிகள் . . . . 23

முகவரிகளும் தொலைபேசி இலக்கங்களும் . . . . 24-27

# பெண்களுக்கு

அன்பான பெண்களே,

நீங்கள் சேர்மனியில் சுதந்திரமாக வாழலாம். ஆண்களுக்குரிய உரிமைகள் பெண்களாகிய உங்களுக்கும் உள்ளன. ஓர் ஆணினதும் குடும்பத்தினதும் கருத்திற்கு எப்படி பெறுமானம் உள்ளதோ அதுபோலவே உங்கள் கருத்திற்கும் பெறுமானம் உள்ளது. நீங்கள் எப்படி வாழ விரும்புகிறீர்கள் என்பதை நீங்களே முடிவெடுக்கலாம். நீங்கள் (உங்கள் குழந்தைகளும்) வன்முறையற்ற வாழ்வை வாழ உரிமையுள்ளவர்.

அப்படியென்றால் என்ன?
நீங்கள் உங்கள் அனைத்து முடிவுகளையும் தனியாகாவே எடுக்கலாம். நீங்கள் யாரையும் அனுமதி கேட்கத் தேவையில்லை உதாரணத்திற்கு:

- நீங்கள் எங்கே எப்படி வாழ விரும்புகிறீர்கள் என்று. எடுத்துக்காட்டாக, நீங்கள் தனியாகவோ, பெண்களோடோ ஆண்களோடோ வாழலாம். வேறொரு நபரோடு சேர்ந்து வசிக்க விரும்பினால், திருமணம் செய்திருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை,
- ஓர் உறவில் இருக்க விரும்புகிறீர்களா, திருமணம் செய்ய விரும்புகிறீர்களா, பிரிந்து வாழ விரும்புகிறீர்களா, மணமுறிவு பெற விரும்புகிறீர்களா. நீங்கள் வேறொரு பெண்ணையும் திருமணம் செய்துகொள்ளலாம்.
- வேறொருவரை முத்தமிட விரும்புகிறீர்களா அல்லது அவரோடு உடலுறவு வைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா. அதை நீங்கள் மீண்டும் செய்ய விரும்புகிறீர்கள் என்பதையும் நீங்களே முடிவு செய்ய வேண்டும். உங்களுக்குத் திருமணம் ஆகியிருந்தாலும் இதுவேதான்.
- குழந்தை பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா எத்தனை பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள். நீங்கள் கருத்தடை செய்ய விரும்புகிறீர்களா அதை எப்படி செய்ய விரும்புகிறீர்கள், கருக்கலைப்பு செய்ய விரும்புகிறீர்களா என்பதும்.
- நீங்கள் எப்பொழுது வீட்டைவிட்டு வெளியேற விரும்புகீறீர்கள், எங்கே செல்ல விரும்புகிறீர்கள், யாரை சந்திக்க விரும்புகிறீர்கள்
- வங்கியில் சொந்தமாக வங்கிக்கணக்கு வைத்திருக்க விரும்புகிறீர்களா, பணத்தை என்ன செய்ய விரும்புகிறீர்கள், பணத்தை எவ்வளவு எதற்கு செலவு செய்ய விரும்புகிறீர்கள் என்று.
- எந்தத் தொழிலை கற்க விரும்புகிறீர்கள், எந்த இடத்தில் வேலை செய்ய விரும்புகிறீர்கள் என்று. நீங்கள் தொழிற்கல்வியை கற்க விரும்புகிறீர்களா அல்லது பல்கலைக்கழகத்திற்குச் செல்ல விரும்புகிறீர்கள் என்பதும் அதற்குள் அடக்கம்.
- அரசியலில் ஈடுபடவிரும்புகிறீர்களா எந்தக் கட்சியை யாரை தேர்வு செய்வது என்பதும்
- உங்கள் குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பது, ஆனால் குழந்தைகளை வன்முறையில் இருந்து காப்பது உங்கள் கடமை! சேர்மனியல் குழந்தைகளை அடிக்கவோ உதைக்கவோ வேறு ஏதாவது வகையிலோ காயப்படுத்தக் கூடாது. இதுதான் சட்டம்.

next
before

# „குடும்ப வன்முறை“ என்றால் என்ன?

குடும்ப வன்முறை

சமூகத்தில் நெருக்கமாக இருக்கும் அல்லது இருந்த மனிதர்களுக்கு இடையே ஏற்படும் வன்முறையே குடும்ப வன்முறை ஆகும். உ-ம்:

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில்

பெற்றோர்கள் - குழந்தைகள் மற்றும்

தன்பாலின வாழ்க்கைத்துணை

குடும்ப வன்முறை

- பாதுகாப்பானதாக நம்பப்படும் வீட்டில்தான் பொதுவாக இடம்பெறும்
- இது மிகவும் மெதுவாக செல்லும் விடயமாகும். அதன்போது சம்பந்தப்பட்டவருக்கு அவமானப்படுத்தல்களும் வன்முறை நடைவடிக்கைகளும் அது சம்பந்தமான விளைவுகளும் அதிகரித்துக்கொண்டே போகும்.
- இது ஒரு சுழற்சி ஆகும். அதன்போது வன்முறையாளரின் வன்முறை நடவடிக்கைகள் குற்றஒத்துக்கொள்ளல், திருந்துவதற்கான வாக்குறுதிகள் ஆகியவை மாறி மாறி சுழற்சி முறையில் அமையும்.
- பெண்களும் குழந்தைகளுமே அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள்.

  ஆண்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தால் அந்த பாதிப்பைக் கொடுத்தவர் ஆணாகவே இருப்பார்.
- இது தனிப்பட்ட விடயமல்ல, இது ஒரு பொதுவிடயமாகும்!

# குடும்ப வன்முறையின் வடிவங்கள் என்ன?

பல வடிவங்களும் தனித்தனியே கையாளப்படுவதில்லை, ஒன்றிணைந்தே கையாளப்படுகின்றன. அதிகாரத்தை செலுத்துவதும் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதுமே இதில் முக்கியமான அம்சமாகும். வன்முறை வடிவங்களில் அடங்குவன:

உடல்ரீதியான வன்முறை:
தள்ளிவிடுதல், அடித்தல், குத்துதல், உதைத்தல், கழுத்தைப்பிடித்து நெரித்தல், இறுக்கிப்பிடித்தல், கட்டுதல், எரித்தல், ஏதாவதை எறிதல், தலைமுடியைப் பிடித்து இழுத்தல், சாப்பாடு கொடுக்க மறுத்தல், ஆயுதத்தால் தாக்குதல், மற்றும் கொலைசெய்ய முயலுதல் கொலை செய்தல் ஆகியவை அடங்கும்.

பாலியல் ரீதியான வன்முறை:
மனிதர் ஒருவரை கட்டாப்படுத்தி செய்யப்படும் செய்ய முயலப்படும் பாலியல் நடவடிக்கைகள் அனைத்தும் பாலியல் ரீதியான வன்முறை ஆகும். அதில், பாலியல் ரீதியான கட்டாயப்படுத்தல், பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்கொடுமை, பாலியல் எச்சரிக்கை, பாலியல் தாக்குதல், மற்றவர்களை பாலியல் இச்சைப்பொருளாக நடத்துதல், பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் சுரண்டல் ஆகியவை அடங்கும்.

உளவியல், உணர்வியல் ரீதியான வன்முறை:
அச்சுறுத்தல், அவமானப்படுத்தல், எச்சரித்தல், பயப்படுத்துதல், மீண்டும் மீண்டும் கத்துதல், திட்டமிட்ட அமைதிகாத்தல், மற்றவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்துதல் மற்றும் கீழ்ப்படுத்துதல், தனிப்பட்ட பெருமதிப்புள்ள பொருட்களை அழித்தல், வன்முறைக்கு பாதிக்கப்பட்டவரையே பொறுப்பாக்குதல், அவரை குற்றவாளியாக்குதல், பிள்ளைகளை பறிப்பதாக பயமுறுத்துதல் ஆகியவை அடங்கும்.

பொருளாதார ரீதியான வன்முறை:
வேலை செய்வதற்கு தடைசெய்வதோ அல்லது கட்டாயப்படுத்தலோ, பணம் கொடுப்பது தடைசெய்வது, பணத்தை மறுப்பது அல்லது பறிமுதல் செய்வது, பணத்தை செலவு செய்வதை கட்டுப்படுத்தல், வங்கிக்கணக்கை கையாளுவதை மறுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

சமூக ரீதியான வன்முறை:
இது சமூக வாழ்க்கையை உள்ளடக்கியுள்ளது, சிறப்புரிமைகளை சுரண்டும் நடவடிக்கைகள், வேலையாளைப் போல நடாத்துதல், சம்பந்தப்பட்ட நபர் இல்லாமல் முடிவுகளை எடுத்தல், அல்லது அவர்களுக்கான முடிவை எடுத்தல், தொடர்புகளை மட்டுப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல். மொழிவெகுப்பில் பங்குபெறுவதை தடுத்தல், பணம் செலவு செய்வதை தடுத்தல் அல்லது நண்பர்கள் உறவினர்களோடு சந்திப்பதைத் தடுத்தல், பைத்தியமாக உருவகித்தல், அடைத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

# திடீர் குடும்ப வன்முறை - என்ன செய்வது?

பின்தொடர்தல்:
பின்தொடர்தல் என்பது பிரிவிற்குப் பின்போ மற்றவர் ஒருவரை மறுதலித்தபின்போ நடைபெறும். அதனுள் அடிக்கடி தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், தொலைபேசிபதிவுக்கருவியில் செய்திகள் இரவு பகல் அனைத்து நேரத்திலும் மின்னஞ்சல்கள், காதற்கடிதங்கள், பூக்கள், அன்பளிப்புகள், சம்பந்தப்பட்டவரின் பெயரில் பொருட்கள் வேண்டுதல், பின்தொடர்தல் காத்திருத்தல், பொய்க்குற்றச்சாட்டுக்கள்( உதாரணமாக முதலாளிகளிடம்) தெரிந்தவர்கள் வட்டாரத்தில் விசாரித்தல், பொருட்களை நட்டப்படுத்தல், அவமானப்படுத்துதல், அவதூறு பரப்புதல், எச்சரித்தல், வற்புறுத்தல் போன்றவை இதனுள் அடங்கும். பின்தொடர்தல் இணையவெளியிலும் நடைபெறலாம், (இணையவெளி வன்முறையைப் பார்க்கவும்)

இணையவெளி வன்முறை:
இணையவெளி வன்முறை என்றால் என்ன? இணையவெளி மற்றும் ஊடகத்தின் உதவியோடும் இணையஅறையில் (அரட்டைஅறை, இணையப்பக்கம், facebook, instagram போன்ற சமூகஊடகத்தில் இணையச்செய்தியை அனுப்புதல்) கேவலப்படுத்துதல், அவமானப்படுத்துதல், தொல்லைகொடுத்தல், பாகுப்படுத்துதல் இவற்றுள் அடங்கும்.

நீங்கள் துன்புறுத்தப்பட்டோ, எச்சரிக்கப்பட்டோ அல்லது அவமானப்படுத்தப்பட்டாலோ எதிர்த்துப் போராடுங்கள்! கேவலப்படுத்துதல் மற்றும் காயப்படுத்தல் நடக்கும்வரை காத்திருக்காதீர்கள். உறவுநிலையிலேயே வன்முறை அதிகரித்துப்போகிறது என்பது அனுபவம்.

**நீங்கள் வன்முறையை ஏற்றுக்கொள்ளத்தேவையில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் பாதுகாப்பில்லாதவர்களோ உரிமையில்லாதவர்களோ இல்லை.**

திடீர் ஆபத்து நிலையில் நீங்கள் உடனடியாகக் காவல் அவசரஅழைப்பு

**110 இற்கு அழைக்கவும்.**

காவல்அதிகாரிகள் உங்கள் பாதுகாப்பிற்காகவே உள்ளனர், வன்முறையாளருக்கு எதிராக பலவழியிலும் காவலதிகாரிகள் நடந்துகொள்ளமுடியும். Nordrhein-Westfalen இல் §34a Polizeigesetz
சேறு அடிப்படையில் வன்முறையாளருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கமுடியும். இந்த நடவடிக்கையின் மந்திரம்: ”குற்றஞ்சாட்டப்பட்டவர் போவார், பாதிக்கப்பட்டவர் இருப்பார்.“

வன்முறையாளரால் தற்சமயம் உடல், உயிர், சுதந்திரம் ஆகியவை பாதிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர் இருக்கும் வீட்டிலிருந்தும் அவரது சுற்றுச்சூழலிலிருந்தும் வன்முறையாளரை நீக்கலாம்.

வன்முறைவட்டத்தை உடைப்பதற்கு இது அவசியமாகும்.

மீளச்செல்தலுக்கான தடை

வன்முறையாளர் அந்த வீட்டையும் அதன் சுற்றுச்சூழலையும் 10 நாட்கள் நெருங்கக்கூடாது, அது தடைசெய்யப்படுகிறது.

காவலதிகாரிகள் வரும்போது வன்முறையாளர் இன்னும் வீட்டில் இருந்தால், உடனடியாக வீட்டிலிருந்து வெளியேறுவதற்கான ஆணையும் மீளவருவதற்கான தடையும் விதிக்கப்படும்.

காவலதிகாரிகள் வரும்போது வன்முறையாளர் வீட்டில் இல்லையென்றால், மீளவருவதற்கான தடை மாத்திரமே விதிக்கப்படும்.

வன்முறையாளருக்கு உடனடியாக தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை அவர் எடுத்துச் செல்ல காவலதிகாரிகள் அனுமதிப்பார்கள்.

மீளவருவதற்கான தவணைக்காலம் வருவதற்கு முன்னதாகவே வேறு பொருட்கள் தேவைப்படின் அதை காவலதிகாரிகள் உதவியுடன் அவர் எடுத்துக்கொள்ளலாம்.

காவலதிகாரிகள் உங்களுக்குத் தகவல் தந்து அதற்குரிய நேரம் உங்கள் சம்மதத்துடன் ஒதுக்கப்படும்.

திரும்பவருவதைத் தடுப்பதற்கான ஆணை கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை பரிசீலித்தல்

உங்கள் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட 10 நாட்கள் திரும்பவருவதற்கான தடைக்காலமானது கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்கு காவலதிகாரிகள் ஒருமுறையாவது வந்து பார்ப்பார்கள்.

இந்த 10 நாட்களும் நீங்கள் அந்த வீட்டிலேயே பிரச்சினை இல்லாமல் இருக்கலாம், வன்முறையாளரை நீங்கள் வீட்டிற்குள் சேர்க்கக்கூடாது.

ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள காவலதிகாரிகள் எடுக்கக்கூடிய வேறு நடவடிக்கைகள்:

§ 34a Polizeigesetz NRW இன் அடிப்படையிலான நிபந்தனைகள் இருக்கவில்லையானால், வன்முறையாளருக்கு எதிராக காவலதிகாரிகள் வேறு தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கலாம்:

உதாரணத்திற்கு:

- இடத்தைவிட்டு நீங்குவதற்கான ஆணை
- கைதுசெய்தல்
- வீட்டுத்திறப்பை கையகப்படுத்துதல்

காவலதிகாரிகளுக்குத் தெரியவந்த வீட்டுவன்முறை யாவற்றையும் காவலதிகாரிகள் குற்றச்சாட்டுப்பத்திரமாக எழுதுவார்கள்.

வீட்டுவன்முறையின்போது காவலதிகாரிகள் சமூகம்தந்திருந்தனர் என்ற ஆவணம் காவலதிகாரிகளால் பாதிக்கப்பட்ட உங்களுக்கு தரப்படும், இதை நீங்கள் குடியியல்வழக்கில் ஆதாரமாகப் பயன்படுத்தலாம்.

அத்தோடு காவலதிகாரிகள் -வீட்டுவன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தகவல்கள்- என்னும் கையேட்டை தருவார்கள், அதில் காவலதிகாரிகள் நடவடிக்கைகள் உங்களுக்கான சட்டப்படியான பாதுகாப்புமுறைமைகள் தொலைபேசி இலக்கம் மற்றும் ஆலோசனை மையங்கள் ஆகியவை அடங்கியிருக்கும்.

# எப்படித் தொடர்வது?

திரும்ப வருவதற்கான, 10 நாள் தடைக்காலத்தில் நீங்கள் உங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்ப விடயங்களைக் கவனித்துக்கொள்ளலாம்.

நீங்கள் இதற்கு பக்கம் 24 இலிருந்து 27 வரை உள்ள ஆலோசனை மையங்கள் மற்றும் உதவிமையங்களின் உதவியை நாடலாம்.

வன்முறைப்பாதுகாப்புச்சட்டத்தின் அடிப்படையில் சட்டப்படியான பாதுகாப்பிற்கும் நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.

தேவைப்படின், உங்கள் விண்ணப்பத்தைப் பற்றி நீதிமன்றம் முடிவெடுக்கும்வரை வீட்டைவிட்டு வெளியேற்றலையும் திரும்பி வருதலுக்குமான தடையையும், நீடிக்கலாம்.

விண்ணப்பத்தை நகரநீதிமன்றத்தில்

- நீங்களாகவோ
- சட்டத்தரணி மூலமோ செய்யலாம்

விண்ணப்பம் செய்த காலத்திலிருந்து வன்முறையாளர் திரும்பிவருதல்தடைக்காலம் மீண்டும் தொடங்குகிறது.
நீதிமன்றம் முடிவெடுத்த நாளில் தவணை முடிவடையும். காவலதிகாரிகள் விதித்த வீட்டுவெளியேற்றத்திலிருந்து திரும்பிவருதல் தடை அதிகப்பட்சமாக 10 நாள் தவணைக்குப் பின் முடியும்.

next
before

# நீதிமன்ற பாதுகாப்பு முறைகள் என்ன உள்ளன?

பாதுகாப்புமுறைகளாக பின்வருவன அமைகின்றன:

- தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கான ஆணைகள்
- இணைந்து பாவித்த வீட்டின் உரிமை
- பிள்ளைகள் எங்கே தங்குவது என்பதற்கான உரிமை அல்லது தனிப்பாதுகாப்பு உரிமை
- பிள்ளைகளைப் பார்ப்பதற்கான உரிமையின் மட்டுப்படுத்தப்பட்ட வரையறையை நீக்குதல்
- நட்டஈடும் வலிநிவாரணநட்டஈடும்

பொதுவான பாதுகாப்பு ஆணைகளும், இணைந்து பாவித்த வீட்டைப்பற்றிய ஆணையும் வேறு வன்முறைநடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தலை தடுப்பதற்கே ஏற்படுத்தப்பட்டன.

விண்ணப்பத்தின் போது குடும்பவன்முறை இருக்கிறது என்பதை நம்பகரமாக சமா்ப்பிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட உங்களுக்கு, வீட்டுவன்முறையின்போது சமூகம்தந்தனா் எனக் காவலதிகாரிகளால் தரப்பட்ட ஆவணத்தின்மூலம் நிருபிக்கலாம்.

நீதிமன்ற பாதுகாப்பு ஆணைகள்

வன்முறையாளரால் வேண்டுமென்றே உடம்பில், உடல்நிலையில் அல்லது சுதந்திரம் காயப்படுத்தப்பட்டிருந்தால் § 1 Gewaltschutzgesetz (வன்முறைச்சட்டம்) இன் பிரகாரம் நகரநீதிமன்றம் வேறு காயங்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு ஆணைகள் பிறப்பிக்கலாம்.

வன்முறையாளருக்கு பின்வரும் தடையை நீதிமன்றம் விதிக்கலாம்:

- உங்கள் வீட்டிற்குள் நுழைவதற்கு
- உங்கள் வீட்டை குறிப்பிட்ட அளவு சுற்றுவட்ட தூரத்திற்கு நெருங்குவதற்கு
- நீங்கள் புழங்கும் வேறு இடங்களுக்கு அவா் செல்வதற்கு (உதாரணத்திற்கு வேலைசெய்யும் இடம், சிறுபிள்ளைகள் பாடசாலை)
- உங்களோடு தொடா்பு கொள்வதற்கு (நேரடியாக, தொலைபேசி மூலம், தொலைநகல், கடிதம், மின்னஞ்சல்) அல்லது
- தற்செயலான சந்திப்புக்களை உங்களுடன் ஏற்பாடு செய்தல்

உங்கள் பாதுகாப்பிற்குத் தேவைப்படின் நீதிமன்றம் வேறு சில நடவடிக்கைகளுக்கும் ஆணையிடலாம்

பாதுகாப்பு ஆணைகள் குறிப்பிட்டதொரு வரைசெய்யப்பட்ட காலத்திற்கே பிறப்பிக்கப்படும்.

பாதுகாப்பு ஆணையை மீறி வன்முறையாளர் நடந்தால், அது § 4 Gewaltschutzgesetz வன்முறைப்பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படலாம்.

இருவருக்குமான வீட்டை ஒப்படைத்தல்

நீங்கள் உடல், உடல்நிலை மற்றும் உங்கள் சுதந்திரம் ஆகியவற்றில் காயப்பட்டு பாதிக்கப்பட்டவராகியிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவரோடு ஒரே வீட்டில் இருப்பவராக இருந்தால், நீங்கள் உங்களுக்கு பொறுப்பான நகரநீதிமன்றத்தில் § 2 Gewaltschutzgesetz வன்முறைச்சட்டத்தின் பிரகாரம் வீட்டை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை நீங்கள் செய்யலாம்.

வன்முறையாளர் உங்களை எச்சரித்திருந்தாலும், தேவைப்படின் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு இருவருக்குமான வீட்டை உங்களிடம் ஒப்படைப்பாதற்கான உரிமை இருக்கிறது, உதாரணம்: உங்களின் குழந்தைகளின் நலன் பாதிக்கப்பட்டால்

அதற்கு சம்பவம் நடந்து அல்லது, அவரால் எச்சரிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் உங்கள் சட்டத்தரணி மூலம் நீங்கள் வீட்டை ஒப்படைக்குமாறு விண்ணப்பம் செய்திருந்தால் வீட்டை ஒப்படைப்பதற்கான உரிமை இருக்கிறது.

வீட்டை ஒப்படைப்பதற்கான காலம்

வீட்டின் சொந்தக்காரராக குற்றஞ்சாட்டப்பட்டவர் இருந்தால், உங்கள் பாதுகாப்பிற்குத் தேவைப்படும் காலத்திற்கு மாத்திரம் வீடு முதலில் ஒப்படைக்கப்படும்.

அதிகப்பட்சமாக ஆறு மாதமாக இருக்கலாம், ஆனால் அது நீடிக்கப்படலாம்.

குற்றஞ்சாட்டப்பட்டவரோடு இணைந்து வீட்டு ஒப்பந்தம் அமைத்திருந்தால், அல்லது அது இணைந்து வாங்கியிருந்த வீடாக இருந்தால், அது ஒவ்வொரு தனிப்பட்ட நிலையைப் பொறுத்து நீதிமன்றம் செயற்படும்.

நீங்கள் மாத்திரமே தனியாக வீட்டைப் பாவிப்பதற்கு தடையாக வன்முறையாளர் இருக்கக் கூடாது. வீட்டு ஒப்பந்தத்தை அவர் நிற்பாட்டுவதற்கோ, அல்லது விற்பதற்கு நீதிமன்றம் தடைபோடலாம்.

நட்டஈடும் வலிநிவாரணமும்

குற்றஞ்சாட்டப்பட்டவர் உங்கள் உயிர், உங்கள் உடல்நிலை, உங்கள் உடல் உங்கள் சுதந்திரம் ஆகியவற்றை பாதிக்கும் வகையில் வேண்டுமென்றோ கவனஈனமாகவோ செயற்பட்டிருந்தால், § 823 BGB இன் பிரகாரம் வன்முறையாளருக்கு எதிராக நட்டஈடு கேட்கலாம்.

அதைத் தவிர்த்து, உங்கள் உயிர், உங்கள் உடல்நிலை, உங்கள் உடல் உங்கள் சுதந்திரம் மற்றும் பாலியல் விருப்பு ஆகியவை பாதிக்கப்பட்டிருந்தால், § 253 Abs. 2 BGB இன் பிரகாரம் வலிநிவாரணம் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த உரிமைகளை சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**பராமரிப்பு உரிமை, எங்கே தங்குவது என முடிவெடுக்கும் உரிமை, பார்வையிடல் உரிமை**

வீட்டுவன்முறையின்போது வீட்டில் வசிக்கும் பிள்ளைகளும் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் வன்முறைத்தடுப்புச்சட்டத்தின் ஒழுங்குமுறைகள் பிள்ளைகளுக்கு பொருந்தாது. சிறுவர்பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் இங்கு பொருந்தும்.

உங்கள் குழந்தைகள் மீதான வன்முறையை தவிர்ப்பதற்கு நீங்கள் தனிப்பட்ட பராமரிப்பு உரிமையை நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம், அல்லது எங்கே தங்குவார்கள் என்ற முடிவெடுக்கும் உரிமையை விண்ணப்பிக்கலாம்.

இதற்கு உங்களுக்கு பொறுப்பான Jugendamt இன் சட்டத்தரணியின் உதவியை நாடுவது நல்லது. குறைந்த சம்பளம் பெறுபவர்களாக இருந்தால் உங்களுக்குப் பொறுப்பான நகரநீதிமன்றத்தில் வழக்குஉதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

பிள்ளைகளை பராமரிக்கும் உரிமை உங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தாலும், குழந்தையின் தந்தைக்கு குழந்தையை பார்க்கும் உரிமை இருக்கிறது.

நீங்களும் குழந்தையின் தந்தை இரண்டுபேரும் இணைந்து ஒரு முடிவு எடுத்தால், பார்வையிடும் காலத்தைப் பற்றி நீதிமன்றம் முடிவெடுக்கும்.

# வீட்டைவிட்டுப் போவது - எங்கே?

-வீட்டு வன்முறைக்கு உள்ளான பலர் போலவே - நீங்களும் இணைந்து இருந்த வீட்டில் இருக்க விரும்பாவிடில், உறவினர்கள் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கமுடியாதென்றால் பெண்கள் விடுதியின் உதவியை நாடுவதற்கான வசதி உள்ளது.

Kreis Steinfurt பகுதியில் Rheine இல் உள்ள பெண்கள் விடுதியை நாடலாம்.
அங்கே வசிப்பவர்களின் பாதுகாப்புக் கருதி அதன் முகவரி இரகசியமாக உள்ளது.

Frauenhaus பெண்கள் விடுதி Rheine,
தொலைபேசி: 05971/12793
எந்நேரமும் தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம்.

தொலைபேசி உரையாடலின்போது முக்கியமான கேள்விகளுக்கு பதில் கிடைக்கும், உதாரணத்திற்கு நீங்கள் வரும்போது எந்த ஆவணங்களைக் கொண்டுவரவேண்டும் என்பது உட்பட.
பெண்கள்விடுதி ஒரு தங்கும்விடுதி அல்ல. அங்கு வசிக்கும் பெண்கள் தங்கள் வாழ்க்கையை அவர்களாகவே முடிவு செய்வார்கள்.
அங்கே உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கிடைக்கக்கூடியவை:

- உறைவிடமும் பாதுகாப்பும்
- இலவச ஆலோசனை
- உதவியும் ஆதரவும்

நிபுணத்துவரீதியான தனிப்பட்ட ஆலோசனையின்போது மேலே குறிக்கப்பட்ட கேள்விகள் ஆலோசிக்கப்படும்.

உதவியும் ஆதரவும் நீங்கள் உங்கள் வாழ்க்கையை திட்டமிட இலகுவாக்கவேண்டும். உதாரணத்திற்கு புதிய வீடு தேடுதல், வேறு சிறுபிள்ளைகள் பாடசாலை தேடல், வேறு பாடசாலை தேடல்,
பின்வரும் இணையப்பக்கங்களில் மேலும் உதவி மற்றும் ஆதரவு மையங்களின் இணையமுகவரியும் பெண்கள் விடுதியின் இடமிருந்தாலும் குறிக்கப்பட்டிருக்கும்:

www.frauen-info-netz.de/
www.frauenhauskoordinierung.de/hilfe-bei-gewalt
www.odabs.org/nordrhein-westfalen/liste.html
www.bmfsfj.de/bmfsfj/themen/gleichstellung/frauen-vor-gewalt-schuetzen

# பெண்களுக்கு எந்த உதவித்திட்டங்கள் உள்ளன?

பெண்களுக்கு எதிரான வன்முறை உதவித்தொலைபேசி

பெண்களுக்கு எதிரான வன்முறை உதவித்தொலைபேசி பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் வழங்குகிறது:

116 016 மற்றும் இணையத்தில் www.hilfetelefon.de

அனைத்துவகை வன்முறைகளுக்கும் எந்நேரமும் இலவசமாக

ஆலோசனைக்கு நீங்கள் பெயர் குறிப்பிடத் தேவையில்லை, நம்பிக்கையானது, தடையில்லாதது, 18 மொழியில் சைகைமொழியிலும் இலகுமொழியிலும் அமையும்.

நீங்கள் விரும்பின் ஆலோசனை கொடுப்பவர்கள் அந்த இடத்திற்குப் பொறுப்பான ஆதரவுமையத்தை வழங்குவார்கள்.

116 016
Hilfetelefon
Gewalt gegen Frauen
www.hilfetelefon.de

# பெண்கள் ஆலோசனை மையம்

Diakonie WesT e.V. இன் பாலியல் வன்முறைக்கு எதிரான பெண்கள் ஆலோசனை மையம் நிபுணத்துவ ஆலோசனையும் உண்டு.

எங்களிடம் கிடைப்பன:

- தகவலும் விளக்கமும்
- ஆலோசனை
- பிரச்சினைதலையீடு மற்றும் நிலைப்படுத்தல்
- காவல்நிலையம், நீதிமன்றம், Jugendamt இற்கு உங்களுடன் செல்லல்
- வேறு தொழில்சார் குழுக்களுக்கு அனுப்புவது: உதாரணத்திற்கு சிகிச்சையாளர், மருத்துவர், சட்டத்தரணி

ஆலோசனை சொந்த விருப்பத்தின் பெயரில், நம்பிக்கையானதாக இலவசமாக விரும்பின் யாரென்று அடையாளம் தெரியாமல் நடைபெறும்.
வன்முறையற்ற வாழ்வானது உங்களதும் குழந்தைகளதும் உரிமை!

பெண்கள் ஆலோசனை மையம்
-வீட்டு மற்றும் இணையர் வன்முறை-
இங்கே பின்வருவனவற்றிற்கு ஆலோசனை வழங்கப்படும்:

- அனைத்துவிதமான வீட்டு மற்றும் இணையர்வன்முறை
- பொதுவான வன்முறைப்பாதுகாப்பு உதாரணத்திற்கு வன்முறையின் பின் செய்யப்படவேண்டிய விண்ணப்பங்கள் - பெண்கள் விடுதியில் பாதுகாப்புத் தேடல், பாதுகாப்புத்திட்டம் தயாரித்தல், அவசரத்திட்டம் தயாரித்தல் -
- தீர்வுகண்டுபிடித்தல்நிகழ்வு பிரிந்து செல்லலாமா என்ற முடிவு
- வன்முறையற்ற புதிய வாழ்க்கைமுறை
- நீதிமன்றவழக்குகள் மற்றும் பெற்றோர்ஆசிரியர் சந்திப்பு

Münstermauer 3
48431 Rheine
தொலை.: 05971 800 73 70
மின்னஞ்சல்: frauenberatungsstelle@diakonie-west.de
இணையமுகவரி: www.diakonie-west.de/hilfeberatung/hilfe-bei-gewalt-gegen-frauen

பாலியல்வன்முறைக்கு எதிரான அலோசனை மையம்
-பாலியல் வன்முறை மையப்படுத்தியது-
பின்வருவனவற்றிற்கு ஆலோசனை வழங்கப்படும்

- பாலியல்வல்லுறவு / பாலியல்தொல்லை அல்லது பாலியல்தாக்குதல்
- நீண்டகாலத்திற்கு முன்பு நடந்த பாலியல்வன்முறைஅனுபவம்
- நாளாந்த பாலியல்தொல்லை அல்லது வேலையிடத்தில் பாலியல்தொல்லை
- பாலியல்துஷ்பிரயோகம்
- குற்றச்சாட்டு செய்யப்போகிறீர்களா என்ற யோசனை
- வரவிருக்கும் நீதிமன்ற விசாரணை

Münsterstr. 48
48431 Rheine
தொலை.: 05971 800 92 92
மின்னஞ்சல்: fachberatung-gewalt@diakonie-west.de
இணையமுகவரி: www.diakonie-west.de/hilfe-beratung/hilfe-bei-gewalt-gegen-frauen

# வேறு உதவிகள்

வயதுவந்தவர்களுக்கான மனவடுவிற்கான மருத்துவஉதவி
பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள்
அதில் அடங்கியவை: ஆலோசனையும் தகவலும், தன்னை மூழ்கடிக்கும் உணர்வுகள் என்ற அனுபவத்தைக் கையாளுவதற்கான உதவி
பாதுகாப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டுத்திறனை மீளஅமைப்பதற்கான உதவி

UKM – Universitätsklinikum Münster இன் வயதுவந்தவர்களுக்கான மருத்துவஉதவி
தொலைபேசி: 0251/ 83-51888 அல்லது 0251/83-57815
மின்னஞ்சல்: pppambulanz@ukmuenster.de
web.ukm.de/index.php?id=psychosomatik_traumaambulanz

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவஉதவி
வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிருவாகப்பிரச்சினை இல்லா உதவி:

- சிறப்புப் பெற்ற மருத்துவர்களால் ஆலோசனை
- நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் காயங்களை ஆவணப்படுத்தல்
- தடயங்களையும் ஆதாரங்களையும் பாதுகாத்தல்

தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும். வேலைசெய்பவர்கள் இரகசியம் காக்க கடமைப்பட்டவர்கள் ஆவார். தேவைப்படின் (உதாரணத்திற்கு நீதிமன்றவிசாரணை வரும்போது) கண்டவற்றை சட்டமருத்துவத்திற்கு சான்றிதழ் வழங்கலாம், அதன்மூலம் காயங்களின் தன்மையை அறிந்துகொள்ளலாம்.

Universitätsklinikums Münster (UKM) சட்டமருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் வன்முறையால் பாதிக்கப்பட்டோர்களுக்கான பிரிவு
தொலை.: 0251 / 83 5 51 60
web.ukm.de/index.php?id=rechtsmedizingewaltopferambulan (குறிப்பு: இறுதியில் „z“ இல்லாமல்தான் எழுதப்படவேண்டும்)

ASS (இரகசியத் தடயப்பாதுகாப்பு)
பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் மருத்துமனையில் மருத்துஉதவி கிடைக்கப்பெறும், தடயங்கள் இரகசியமுறையில் நீதிமன்றத்திற்கு உகந்த வகையில் ஆவணப்படுத்தப்படும்:

Maria-Josef Hospital – Greven
பிரதானஅவசரப்பிரிவு
Zentrale Notaufnahme, Lindenstraße 29, 48268 Greven, தொலை.: 02571 / 502-0
இரகசியத் தடயப்பாதுகாப்பு அங்கில்லை- Franziskus-Hospital, Münster இற்கு இலவசமான போக்குவரத்து

Klinikum Rheine – Mathias-Spital Rheine
Frauenklinik பெண்கள் மருத்துவமனை, Frankenburgstraße 31, 48431 Rheine, தொலை: 05971 / 42-0
இரகசியத் தடயப்பாதுகாப்புவசதி உண்டு

Klinikum Ibbenbüren
Große Straße 41, 49477 Ibbenbüren, தொலை.: 05451 / 52-0
இரகசியத் தடயப்பாதுகாப்புவசதி அங்கில்லை, Mathias-Spital, Rheine இற்கு அவசரச்சிகிச்சை வண்டியில் இலவசமான போக்குவரத்து

# குழந்தைகளுக்கு என்ன உதவி இருக்கிறது?

குடும்பவன்முறையால் சிறுவர்களும் இளையோர்களும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள், அல்லது அவர்களது தாய்மார்கள் எப்படித் துன்புறுத்தப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள், அல்லது அடக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அது அவர்களது மனதில் பாதிப்பை ஏற்படுத்தலாம். அவர்கள் தாங்கள்தான் அதற்குப் பொறுப்பு என்றும் குற்றவுணர்வில் அதிகமாக ஆழ்ந்துள்ளனர். வன்முறையின்போது உடனிருந்த சிறுவர்களுக்கும் இளையோருக்கும் ஆலோசனையும் உதவியும் தேவைப்படும். அதற்கு குடும்பத்தைத்தாண்டி நிபுணத்துவ உதவியும் தேவைப்படும். சிறுவர்களுக்கும் இளையோருக்குமான உதவி Kreis Steinfurt Jugendämtern, லும் சேர்மன் சிறுவர்பாதுகாப்புபிரிவிலும் Deutschen Kinderschutzbund in Rheine இல் கிடைக்கும். சிறுவர்களும் இளையோரும் சேர்மனி முழுக்க இலவசமாக வீட்டுத்தொலைபேசியிலிருந்தும் கைத்தொலைபேசியிலிருந்தும் Kinder- und Jugendtelefon des Deutschen Kinderschutzbundes சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் சிறுவர் மற்றும் இளையோருக்கான தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம்.

„Nummer gegen Kummer“, மனவலிக்கு எதிரான இலக்கம்
தொலைபேசி: 08 00 / 1 11 03 33 அல்லது 116111

இங்கு திங்களிலிருந்து வெள்ளி வரை 14.00 – 20.00 Uhr மணிவரை பேசுவதற்கு ஒருவர் இருப்பார்.

நீங்கள் தேர்ந்தெடுத்து அழைத்த இலக்கம் அழைக்கப்பட்ட தொலைபேசிஇலக்க நிரலில் இடம்பெறாது.

இணையவழியிலான ஆலோசனையும் பெற்றுக்கொள்ளலாம் (www.nummergegenkummer.de).

UKM இன் சிறுவர்களுக்கும் இளையோருக்கமான மருத்துப்பிரிவு
தொலை.: 0251/ 83-56440 (செயலகம)
தொலை.: 0251/ 83 56418 (வாட் 24h மணித்தியாலமும் தொடர்புகொள்ளலாம்)
மின்னஞ்சல்: sekretariat-czerny@ukmuenster.de
web.ukm.de/index.php?id=11725

# இளைஞருக்கும் ஆண்களுக்கும் என்ன உதவி கிடைக்கும்?

நெருக்கடிகளுக்கும் வன்முறைக்கும் ஆலோசனை - ஆண்களுக்கு ஆண்களே ஆலோசனை வழங்குவார்.

உண்மையான ஆண்கள் பேசுவார்கள்

ஆண்களுக்கு ஆண்களே ஆலோசனை வழங்குவார்.

வன்முறையாக நடந்துகொண்ட அல்லது வன்முறையாக நடந்துகொள்வார்கள் எனப் பயப்பட்டு தமது நடந்துகொள்ளும் விதத்தை மாற்றிக்கொள்ள விரும்பும் இளைஞர்களுக்கும் ஆண்களுக்குமான வன்முறைஆலோசனை

செய்த வன்முறைசம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதுதான் குறிக்கோளாகும். இவ்வளவு துன்பத்திற்கும் பயத்திற்கும் காயங்களுக்கும் தாங்கள் காரணம் என்பதை இப்படித்தான் அவர்கள் அறிந்துகொள்வார்கள். அதிகமான ஆண்களும் வெட்கப்பட்டு இப்படியான தெளிவு பெற்றால் இந்த வட்டத்திலிருந்து வெளியெறுவதற்கு இது முக்கிமாகும்.

Caritasverband Tecklenburger Land e. V.
Klosterstr. 19
49477 Ibbenbüren
Markus Temmen
தொலை.: 0171 3010652
Email: gewaltberatung@caritas-ibbenbueren.de
www.echte-männer-reden.de

Täterarbeit Chance e.V.

Der Chance e.V. என்னும் இயக்கம Kreis Steinfurt பகுதியில் வன்முறையாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறது. வன்முறையாக நடந்துகொள்வதற்கான மூலவேர் எங்கிருக்கிறது என ஆராய்ந்து தவிர்ப்பதற்கான வழி ஆராயப்படும். பிரச்சினையாக நெருக்கடியான சந்தர்ப்பத்தில் வன்முறையற்ற வாழ்க்கையும் வன்முறை இல்லாத உரையாடலும் அவசியமாகிறது. தனித்தனியான ஆலோசனையும் குழு ஆலோசனையும் வழங்கப்படுகிறது. Steinstr. 13 in Steinfurt-Burgsteinfurt இல் ஆலோசனை நடைபெறும்.

Lothar Bardenhorst
தோலை: 0251 620 88 25
கைப்பேசி: 01515 5985193
தொலைநகல்: 0251 620 88 49
l.bardenhorst@chance-muenster.de

Peter Runtenberg
தொலை: 0251 620 88 26,
கைப்பேசி: 01525 108 26 41
தொலைநகல்: 0251 620 88 49
p.runtenberg@chance-muenster.de
www.chance-muenster.de/
taeterarbeit.html

உதவி மற்றும் ஆலோசனை மையங்களுக்கான வேறு இணைப்புக்கள்
www.maennerhilfetelefon.de/
www.maennerberatungsnetz.de/beratung/
www.maennergewaltschutz.de/maennerschutz-und-beratung/maennerschutzeinrichtungen/

# பாதுகாப்பிற்கே முன்னுரிமை – என்ன செய்வது?

குடும்பவன்முறை இருக்கிறது என்பதற்கான முதலாவது அறிகுறி தென்படும்போதே நீங்கள் உங்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். குழந்தைகளுக்கு பொறுப்பானவராக வன்முறையாளரே இருந்தாலும்கூட வன்முறையாளரோடு இணைந்துவாழ்வதில் தான் உங்கள் வாழ்க்கையை ஓட்ட முடியும் என்ற நிலை இருந்தாலும் நீங்கள் பிள்ளைகளுக்கான பாதுகாப்பைத் தேடி வெளியே வரமுடியும்.

உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பை அதிகரிக்கும் எவற்றையும் செய்யலாம்.

- தனிமைப்படுத்த விடாதீர்கள் உங்கள் அயலரோடு தொடர்பில் இருங்கள், தெரிந்தவர்களையும் உறவினர்களையும் உங்களை அடிக்கடி வந்துபார்த்துச்செல்லச் சொல்லுங்கள்.
- உங்கள் வீட்டுவைத்தியரை நம்பிப் பேசுங்கள், உங்கள் காயங்களை அவர்களிடம் காட்டுங்கள்.
- வன்முறையால்பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவப்பிரிவை நாடுங்கள். அங்கே உங்கள் காயங்களை நீதிமன்ற முறையில் ஆவணப்படுத்தச் சொல்லுங்கள்.
- காவலதிகாரிகளின் அவசரஅழைப்பு இலக்கமான 110யும் உங்கள் நம்பிக்கையானவரின் இலக்கத்தையும் தொலைபேசியிலும் கைப்பேசியிலும் பதியுங்கள்.
- நீங்கள் ஆபத்தில் உள்ளீர்கள் என்றோ அபாயநிலையில் இருக்கிறீர்கள் என்றோ நீங்கள் உணர்ந்தால் வீட்டைவிட்டு உடனே வெளியேறுங்கள்.
- உங்களுக்கு முக்கியமான ஆவணைங்களை பிரதிஎடுத்து வையுங்கள்.
  (அடுத்தபக்க சோதனைநிரலை சோதனை செய்யவும் அந்தப் பிரதியை உங்கள் நம்பிக்கைக்குரியவரிடம் ஒப்படைத்து வையுங்கள்.
- ஆலோசனைமையம் ஒன்றை நாடுங்கள், அங்கே ஆலோசனை, உதவி, ஆதரவு கிடைக்கும்.

# வீட்டிலிருந்து வெளியேறுதல் - என்ன தேவைப்படும்?

நீங்கள் உங்கள் வீட்டைவிட்டு வெளியேறினால் பின்வரும் நிரலில் உள்ள பொருட்களைஎடுத்துச்செல்லவேண்டும். தனிப்பட்ட படிவங்கள் அசலிலும் மற்றவர்கள் சம்பந்தப்பட்ட படிவங்கள் பிரதியிலும்.

நிரல்:

- ✓ திறப்பு (உதாரணம்: வீடு, கார், வேலையிடம், பெட்டி)
- ✓ ரொக்கப்பணம், வங்கிஆவணங்கள், கடனட்டை, சேமிப்புப்புத்தகம்)
- ✓ அடையாளஅட்டை, சிறுவர் அடையாளஅட்டை
- ✓ மருத்துவக்காப்பீட்டு அட்டை
- ✓ திருமணச்சான்றிதழ் பிறப்புச்சான்றிதழ்
- ✓ வாடகைஒப்பந்தம், காப்புறுதிஒப்பந்தங்கள்
- ✓ வேலைஒப்பந்தம், சான்றிதழ், Lohnsteuerkarte, Sozialversicherungsausweis
- ✓ Arbeitsamt, Sozialamt, Jugendamt, Ausländerbehörde, ஆகியவற்றின் கடிதங்கள் ...
- ✓ நீதிமன்றக் கடிதங்கள் உதாரணத்திற்கு பாதுகாப்பு ஆணைகள்
- ✓ „ஏற்கனவே குடும்பத்தில் வன்முறை நடந்திருந்தால் அது பற்றிய காவல்துறையின் அறிக்கை (ஏற்கனவே நடந்திருந்தால்)
- ✓ தேவையான மருந்துகள், மருத்துவச்சான்றிதழ்கள்
- ✓ சொந்தப் பொருட்கள்
- ✓ பாடசாலைப்பொருட்கள், பிள்ளைகளின் விளையாட்டுப்பொருட்கள்
- ✓ உங்களுக்கும் பிள்ளைகளுக்குமான உடுப்புகள்
- ✓ அழிவுகளையும் காயங்களையும் கைப்பேசியில் ஆவணப்படுத்தல்

# எந்தெந்தபொருளாதார உதவி இருக்கிறது?

குடும்பவன்முறையின் பின்பு குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து நீங்கள் பிரிந்துவாழ்ந்தால், நீங்கள் தந்காலிகமாக அரசாங்க பொருளாதாரஆதரவை நம்பி இருப்பீர்கள். Sozialgesetzbuch II அடிப்படையிலான உதவிகள், Unterhaltsvorschussgesetz (UVG) மற்றும் Opferentschädigungsgesetz (OEG) அடிப்படையில் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

Sozialgesetzbuch II அடிப்படையிலான உதவி
உங்களது, பிள்ளைகளது தேவையைப் பூர்த்தி செய்ய உங்களது வருமானத்தில், சொத்தில் அல்லது யாராவது உதவி செய்ய முடியாவிடில் உங்களுக்கு Arbeitslosengeld II / Sozialgeld. உரிமை உள்ளது.

„notwendiger Lebensunterhalt“ என்னும் சொல் உணவுத்தேவை, உடுப்பு மற்றும் உறைவிடம் ஆகியவை அடங்கும். அத்தோடு ஒருதடவைக்கு வீட்டுப்பொருட்கள் மற்றும் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கும் உதவித்தொகை பெற்றுக்கொள்ளலாம்.
உங்களுக்கு பொருளாதார நெருக்கடி இருப்பின், உதாரணத்திற்கு வேலையிழப்பு,, நீங்கள் உங்கள் வசிப்பிடத்தின் jobcenter இல் விண்ணப்பம் போடவும்.
இதற்கு உங்கள் வருமான சொத்து விபரம் தேவைப்படும் (நிரலை பார்க்கவும்). வேறு எந்த ஆவணங்கள் தேவை என Jobcenter இல் அறிந்துகொள்ளலாம்.

நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் விண்ணப்பம் செய்த மாதத்திலிருந்து Arbeitslosengeld II / Sozialgeld வழங்கப்படும்.

Unterhaltsvorschussgesetz (UVG) அடிப்படையிலான உதவி

உங்களோடு வசிக்கும் பிள்ளைகளுக்குரிய செலவை வன்முறையாளர் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் UVG அடிப்படையிலான உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

UVG பெறுவதற்கான உரிமை தனியே இருக்கும் பதினெட்டு வயதிற்குட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் உண்டு.

விண்ணப்பத்தை உங்களுக்குப்பொறுப்பான Jugendamt இல் செய்யலாம்.

Opferentschädigungsgesetz (OEG) அடிப்படையிலான உதவிகள்

குற்றஞ்சாட்டப்பட்டவர் வன்முறைச்செயலினால் (வேண்டுமென்றே சட்டத்திற்கு முரணான தாக்குதல்) உடல்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால்,OEGஅடிப்படையிலான உதவிக்கு உங்களுக்கு உரிமை உள்ளது.

உங்களுக்கு எதிரான தாக்குதலை சட்டப்படி எதிர்க்கக்கூடியவர்களுக்கு ஏற்பட்ட உடல்நிலைப்பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் இந்த உரிமை உண்டு.

இது உங்களுக்கு உதவிய பிள்ளைகள், தெரிந்தவர்கள், அயலவர்களாக இருக்கலாம்.
Landschaftsverband Westfalen-Lippe
(Versorgungsamt Westfalen), இல் இதற்கான விண்ணப்பத்தை செய்யலாம் Von-Vincke-Str. 23-25, 48143 Münster

விண்ணப்பம் செய்யும் போது உங்கள் மருத்துவக்காப்புறுதி காவலதிகாரிகளின் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பானவர், „Weißen Rings“ வேலைசெய்பவர்கள் ஆகியோர் உங்களுக்கு உதிவியாக இருப்பார்கள்.

# முகவரியும் தொலைபேசி இலக்கமும்

(அகரவரிசைப்படி)

நகரநீதிமன்றம் Ibbenbüren
தொலைபேசி: 0 5451 / 92 60
தொலைநகல்: 0 5451 / 92 61 00
zuständig für die Städte und Gemeinden Hörstel, Hopsten, Ibbenbüren, Mettingen, Recke,
Saerbeck பிரிவிற்குப் பொறுப்பு

நகரநீதிமன்றம் Rheine
தொலைபேசி: 0 59 71 / 4 00 50
தொலைநகல்: 0 59 71 / 40 05 20
Emsdetten, Neuenkirchen, Rheine பிரிவிற்குப் பொறுப்பு

நகரநீதிமன்றம Steinfurt
தொலைபேசி: 0 25 51 / 6 60
தொலைநகல்: 0 25 51 / 6 61 55
Altenberge, Greven, Horstmar, Laer, Metelen, Nordwalde, Ochtrup, Steinfurt, Wettringen பிரிவிற்குப் பொறுப்பு

நகரநீதிமன்றம் Tecklenburg
தொலைபேசி: 0 54 82 / 6 70
தொலைநகல்: 0 54 82 / 67 12
Ladbergen, Lengerich, Lienen, Lotte, Tecklenburg, Westerkappeln பிரிவிற்குப் பொறுப்பு

Amt für Soziales, Gesundheit und Pflege des Kreises Steinfurt, Sozialpsychiatrischer Dienst
Dienststelle Steinfurt பிரிவு சமூக, உடல்நிலை, பராமரிப்பிற்கான Kreises Steinfurt அலுவலகம்
தொலைபேசி: 0 2551 / 69 28 30
Dienstelle Tecklenburg பிரிவு
தொலைபேசி: 0 2551 / 69 35 60
0 2551 / 69 35 70
Dienstelle Rheine
தொலைபேசி: 0 2551 / 69 40 27
0 2551 / 69 40 25

Anonyme Spurensicherung ASS (அடையாளம் தெரியாமல் தடயப்பாதுகாப்பு)
Universitätsklinikum Münster
Institut für Rechtsmedizin சட்டமருத்துவப்பிரிவு
Röntgenstr. 23
48149 Münster
தொலைபேசி: 0 251 / 835 51 51

Maria-Josef Hospital Greven
Zentrale Notaufnahme (அவசரச்சிகிச்சைப் பிரிவு)
Lindenstr. 29
48268 Greven
தொலைபேசி: 02571 / 50 20

Klinikum Rheine, Mathias Spital Rheine
Frauenklinik (பெண்கள்மருத்துவமனை)
Frankenburgstr. 31
48431 Rheine
தொலைபேசி: 05971 / 420

Klinikum (மருத்துவமனை) Ibbenbüren
Große Str. 41
49477 Ibbenbüren
தொலைபேசி: 05451 / 520

Ärztliche Kinderschutzambulanz des Deutschen Roten Kreuzes
Melchersstr. 55
48149 Münster
தொலைபேசி: 0251 / 41 85 40
தொலைநகல்: 0251 / 41 85 426

Caritasverbandes Tecklenburger Land e. V. இன் இளைஞருக்கும் ஆண்களுக்குமான ஆலோசனை மையம்
Klosterstr. 19
49477 Ibbenbüren
தொலைபேசி: 0171 / 301 06 52

Caritasverband இன் பெற்றோர் இளையோர் மற்றும் குழந்தைகளுக்கான ஆலோசனை மையம்
Bachstr. 15
48282 Emsdetten
தொலைபேசி: 0 25 72 / 157 39

Kirchstr. 5
48268 Greven
தொலைபேசி: 0 25 72 / 157 39
Klosterstr. 19
49477 Ibbenbüren
தொலைபேசி: 0 54 51 / 50 02 23

Lingener Str. 13
48429 Rheine
தொலைபேசி: 0 59 71 / 86 20

Diakonischen Werks இன் பெற்றோர் குழந்தைகள் மற்றும் இளையோருக்கான ஆலோசனை மையம்
Stettiner Str. 25
49525 Lengerich
தொலைபேசி: 0 54 81 / 305 42 40
தொலைநகல்: 0 54 81 / 305 42 41

Wasserstr. 32
48565 Steinfurt
தொலைபேசி: 0 25 51 / 8637-0
தொலைநகல்: 0 25 51 / 8637-111

பிரிவு மற்றும் மணமுறிவு ஏற்படும் போது ஆலோசனை

Ladbergen, Saerbeck, Hörstel, Hopsten, Recke und Mettingen நகரங்களிற்கு:
Kreisel e. V.
Schulstr. 11a, 49477 Ibbenbüren,
தொலைபேசி: 02572 / 882 60

Westerkappeln, Lotte, Tecklenburg, Lengerich und Lienen நகரங்களிற்கு:
Beratungszentrum Diakonie
Stettiner Str. 25, 49525 Lengerich
தொலைபேசி: 05481 / 305 42 66

Altenberge, Nordwalde und Steinfurt-Borghorst நகரங்களிற்கு:
Caritasverband Steinfurt
Kirchplatz 8, 48565 Steinfurt
தொலைபேசி: 02552 / 702 4914

Ochtrup, Steinfurt-Burgsteinfurt, Metelen, Horstmar und Laer நகரங்களிற்கு:
Caritasverband Steinfurt
Kirchplatz 8, 48565 Steinfurt
தொலைபேசி: 02552 / 702 4914

Für die Städte und Gemeinden Wettringen und Neuenkirchen und Rheine நகரங்களிற்கு:
Caritasverband Rheine
Lingener Str. 11, 48429 Rheine
தொலைபேசி: 05971 / 8 62 13 15

Stadt Emsdetten நகரத்திற்கு:
Caritasverband Emsdetten-Greven
Bachstr. 15, 48282 Emsdetten
தொலைபேசி: 02572 / 157-0

Kreisel e. V.
Friedrichstr. 1-2, 48282 Emsdetten
தொலைபேசி: 02572 / 882 60

Stadt Greven நகரத்திற்கு :
Caritasverband Emsdetten-Greven
Kirchstr. 5, 48268 Greven
தொலைபேசி: 02571 / 800 90

Stadt Ibbenbüren நகரத்திற்கு:
Caritasverband Ibbenbüren
Klosterstr. 19, 49477 Ibbenbüren
தொலைபேசி: 0 54 51 / 500 20

செர்மன் சிறுவர் பாதுகாப்பு
Deutscher Kinderschutzbund
An der Stadtmauer 9, 48431 Rheine
தொலைபேசி: 0 59 71 / 91 43 90
தொலைநகல்: 0 59 71 / 91 439 33

Bistum Münster இன் தம்பதிகள், குடும்ப மற்றும் வாழ்க்கை ஆலோசனைமையம்
48282 Emsdetten
Kirchstr. 18
தொலைபேசி: 02572 / 9419019

48268 Greven
Münsterstr. 35
தொலைபேசி: 02571 / 98 65 81

49477 Ibbenbüren
Klosterstr. 19
தொலைபேசி: 0 54 51 / 5002 53

48565 Steinfurt
Europaring 1
தொலைபேசி: 0 25 51 / 86 44 46

48429 Rheine
Herrenschreiberstr. 17
தொலைபேசி: 0 59 71 / 9 68 90

Diakonie WesT e. V. இன் பெண்கள் ஆலோசனை மற்றும் பாலியல் ரீதியான வன்முறைக்கு எதிரான நிபுணஆலோசனைமையம் பெண்கள் ஆலோசனைமையம்
Münstermauer 3
48431 Rheine
தொலைபேசி: 05971 / 800 73 70
frauenberatungsstelle@diakonie-west.de

பாலியல் ரீதியான வன்முறைக்கு ஆலோசனைமையம்
Münsterstr. 48
48431 Rheine
தொலைபேசி: 05971 / 800 92 92
fachberatung-gewalt@diakonie-west.de

Frauenhaus Rheine
தொலைபேசி: 05971 / 1 27 93
(எந்நேரமும் ஏற்றுக்கொள்ளப்படும், ஆலோசனை நேரங்கள் தொலைபேசியில் பேசி முடிவெடுத்தபின் வழங்கப்படும்)

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவப்பிரிவு: Gewaltopferambulanz
UKM – Universitätsklinikum Münster,
Röntgenstraße 23, 48149 Münster
தொலைபேசி: 0251 / 83 5 51 51

உதவித்தொலைபேசி „பெண்களுக்கு எதிரான வன்முறை" „Gewalt gegen Frauen"
தொலைபேசி: 116 016 மற்றும் இணையத்தில்
தொலைபேசி: 116 016 மற்றும் இணையத்தில்
www.hilfetelefon.de

உதவித்தொலைபேசி „ஆண்களுக்கு எதிரான வன்முறை" (Gewalt an Männern)
தொலைபேசி: 0800 1 239 900 மற்றும் இணையத்தில் www.maennerhilfetelefon.de

தொழில்மையம் Jobcenter
தயவு செய்து உங்கள் வசிப்பிடத்தின் தொழில்மையம் Jobcenter ஐ நாடவும்.

Jugendamt der Stadt Emsdetten
Am Markt 1
48282 Emsdetten
தொலைபேசி: 02572 / 92 23 16

Jugendamt der Stadt Greven
Rathausstr. 21
48268 Greven
தொலைபேசி: 02571 / 92 00

Jugendamt der Stadt Ibbenbüren
Alte Münsterstr. 16
49477 Ibbenbüren
தொலைபேசி: 05451 / 93 15 29
05451 / 93 16 25

Jugendamt der Stadt Rheine
Klosterstr. 14
48431 Rheine
தொலைபேசி: 05971 / 93 95 11

Jugendamt des Kreises Steinfurt
Dienststelle Steinfurt
Tecklenburger Str. 10
48565 Steinfurt
தொலைபேசி: 02551 / 69 23 05

Jugendamt des Kreises Steinfurt
Dienststelle Tecklenburg
Landrat-Schultz-Str. 1
49545 Tecklenburg
தொலைபேசி: 02551 / 69 32 22

மனவலிக்கு எதிரான இலக்கம் Nummer gegen சிறுபிள்கைள் மற்றும் இளையோருக்கானது
தொலைபேசி: 116 111
பெற்றோர் தொலைபேசி
தொலைபேசி: 0800 / 11 105 50

Opferschutzbeauftragte(r) der Kreispolizeibehörde Steinfurt இன் பாதிக்கப்பட்டவர்கள்பாது காப்புஅதிகாரி
Hansaallee 10
48429 Rheine
தொலைபேசி: 05971 / 9 38 59 14
05971 / 9 38 59 17

Täterarbeit Chance e. V.
Steinstr. 13
48565 Steinfurt
தொலைபேசி: 0251 / 620 8825
0251 / 620 8826

Trauma-Ambulanz für Erwachsene
UKM – Universitätsklinikum Münster
Domagkstraße 22, 48149 Münster
தொலைபேசி: 0251 / 83 – 5 18 88
0251 / 83 – 5 78 15

Weißer Ring e. V.
Steinfurt (குற்றவியலால் பாதிக்கப்பட்டவர்களுக்குமான ஆதரவு குற்றச்செயல்கள் முற்காப்பு இயக்கம்)
தொலைபேசி: 0151 / 55 16 48 26
juergenroscher@web.de

Sozialdienstes Katholischer
Frauen Ibbenbüren e. V.
அவசரகாலத்திற்கான பெண்கள் வீடு (SFK)
49477 Ibbenbüren
தொலைபேசி: 05451 / 9 68 60
info@skf-ibbenbueren.de
(Ibbenbüren சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பெண்களுக்கு)

## வேறு தொலைபேசி இலக்கங்கள்:

| பெயர்/முகவரி | தொலைபேசி | குறிப்புகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## எப்பொழுதும் தொடர்புகொள்ளக் கூடிய



Polizei
Notruf 110

பெண்கள் விடுதி Frauenhaus Rheine
0 59 71 / 1 27 93

உதவித்தொலைபேசி
Hilfetelefon "Gewalt gegen Frauen"
116 016
www.hilfetelefon.de

பதிப்பு: Dezember 2022 · © வடிவமைப்பு: concept-design, Emsdetten